**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.86
https://ngmtamil.in/

# தனிப்பாடல் திரட்டில் நம்பிக்கை பற்றிய செய்திகள்

**கா.வெண்ணிலா,**
முனைவர் பட்டஆய்வாளர், நந்தா கலை மற்றும் கல்லூரி ஈரோடு- 52.
(பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். (641046)
அலைப்பேசி: 6385863331
**முனைவர்.அ.மோகன்ராஜ்**
**நெறியாளர்,** இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஈரோடு- 52.
(பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர். (641046)

**Abstract:**

Literature is not merely a collection of imaginative creations, it serves as a mirror reflecting the beliefs, values, and way of life of people in different periods of society. In this regard, the Thanipadal Thirattu vividly portrays the challenges faced by poets in royal courts as well as in ordinary social settings, while also highlighting the unwavering hope and confidence they maintained amidst hardships.

The poems emphasize enduring beliefs such as " Even in poverty, one should never abandon Tamil" " The world ultimately honors the virtuous", and "divine grace will always provide support." These ideas form the central theme of the anthology. Despite suffering from difficulties and setbacks, the poets of ancient Tamil society expressed strong faith in their abilities, destiny, and perseverance through their compositions.

The songs collected in Thanipadal thirattu continue to inspire courage , resilience ,and a positive outlook on life among readers today. They stand as timeless examples of optimism and determination in the face of adversity. This study examines and analyzes the messages of hope, faith, and confidence reflected in the Thanipadal Thirattu and their relevance to human life.

**முன்னுரை:**

இலக்கியங்கள் என்பவை கற்பனைச் சித்திரங்கள் மட்டுமல்ல அவை அந்தந்தக் காலத்துச் சமுதாய மனிதர்களின் வாழ்வியல் நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் ஆகும். அவ்வகையில் தனிப்பாடல் திரட்டானது மன்னர்களின் அவைகளிலும் சாதராண வீதிகளிலும் புலவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் அவற்றுக்கு நடுவிலும் அவர்கள் கைவிடாத நம்பிக்கையையும் அழுத்தமாகப் பதிவு செய்கிறது. ' **வறுமை வரினும் தமிழ் கைவிடாது'** **'நல்லோரை உலகம் போற்றும்'** மற்றும் **' இறைவனின் அருள் துணையிருக்கும்'** என்ற அசைக்க முடியாத நம்பிக்கையே இப்பாடல்களின் அடிநாதமாகும். சூழல்களால் நலிவுற்ற போதும் தன் ஆற்றலிலும் நீதியிலும் நம்பிக்கை கொண்டு பழந்தமிழ் புலவர்கள் பாடிய பாடல்கள் இன்றும் மனித மனங்களுக்குத் துணிவையும் வாழ்வின் மீதான பிடிப்பையும் வழங்கும் உன்னத ஒளிர் கவிகளாகத் திகழ்கின்றன என்ற நோக்கில் **'தனிப்பாடல் திரட்டில் நம்பிக்கை பற்றிய செய்திகள்'** இவ்வாய்வுக்கட்டுரையில் காண்போம்.

**கடவுள் நம்பிக்கை:**

மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு பேரொளி தங்களின் துயரங்களைத் தீர்க்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையே கடவுள் நம்பிக்கையாகும்.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

எழுத்துக்கள் யாவும் 'அ' என்னும் அகரத்தை முதலாக உடையன. அதுபோல இந்த உலகமானது ஆதிபகவனாகிய இறைவனாக உடையது.

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்."**

மெய்யுணர்வையுடைய இறைவனது திருவடிகளைத் தொழா விட்டால் பல நூல்களையும் கற்றவர்க்கும் அக்கல்வி அறிவால் பயன் யாதொன்றும் இல்லை.

**ஔவையார் தனிப்பாடல் திரட்டில் கடவுள் நம்பிக்கை:**

மனிதப் பிறவி என்பது இறைவன் வழங்கிய அரிய வரம் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. வாழ்க்கையை வீணாக்காமல் அறநெறியுடன் வாழ்ந்து இறைவனை உணர முயல வேண்டும் என்ற கடவுள் நம்பிக்கையை உணர்த்துக்கிறது.

**" அரியது கேட்கின் வரிவடி வேலோய்**
**அரிதரிது மானிட ராத லரிது**
**மானிட ராயினுங் கூன்குருடு செவிடு**
**பேடு நீங்கிப் பிறத்த லரிது**

**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**

**ஞானமுங் கல்வியு நயத்த லரிது**

**ஞானமுங் கல்வியு நயந்த காலையும்**

**தானமுந் தவமுந் தான்செய லரிது**

**தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்**

**வானவர் நாடு வழிதிறந் திடுமே"**

இப்பாடல் வெறும் உலகியல் நீதி மட்டுமல்ல இது ஆழமான கடவுள் நம்பிக்கையையும் கர்ம வினையையும் அடிப்படையாகக் கொண்டது. நாம் நல்ல உடலோடு பிறப்பதும் நல்லறிவு பெறுவதும் இறைவனின் கருணையால் மடடுமே சாத்தியம். அப்படிப் பெற்ற அரிய மனித வாழ்க்கையை வீணாக்காமல் தான தர்மங்கள் செய்து இறைவனைத் தொழுதால் மட்டுமே மனிதப் பிறவி முழுமை அடையும் என்பதை ஔவையார் பாடல் மூலம் அறிய முடிகின்றது.

**விதி நம்பிக்கை:**

மனித வாழ்வின் இன்ப துன்பங்களை லாப நட்டங்களைத் தீர்மானிக்கும் ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தியாகக் காட்டப்படுகிறது. மனிதன் எவ்வளவு தான் முயன்றாலும் ஊழ்வினை எனப்படும் விதியின் பயனை அனுபவித்தே தீர வேண்டும் என்ற ஆழமான தத்துவம் இப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**

**சூழினும் தான் முந்துறும்"**

விதியைப் போல் வலிவுள்ள ஒரு பொருள் உலகில் வேறு இல்லை. அவ்விதி மனிதனுடைய முயற்சிகளையெல்லாம் அழித்து தான் ஒன்றே முடிவில் வெல்கிறது.

மனித வாழ்க்கை விதியால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற எண்ணம் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

**" யாது மூரே யாவருங் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர்தரவ ரா**

**நோதலுந் தணிதலு மவற்றே ரன்ன**

**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**

**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**

**இன்னா தென்றாலு மிலமே மின்னொடு**

**வானந் தண்டுளி தலைஇ யானாது**

**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**

**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**

**முறைவழிப் படூஉ ரமன்பது திறவோர்**

**காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்**

**பெரியோரை வியத்தலு மிலமே**

**சிறியோரை யிகழ்த லதனினு மிலமே"**

சான்றோர் இடரினும் தளரினும் இன்பத்தினும் துன்பத்தினும் எவ்விடத்தும் அயராத உள்ளமும் கலங்காத அமைதியும் உடையார். நலஞ் செய்தாரென ஒருவரை பாராட்டலும் தீது செய்தாரென ஒருவரை இகழ்தலும் இல்லாதவர். இவ்வாறே பெரியோரென ஒருவரைப் புகழ்தலும் சிறியோரெனப் புறக்கணித்தலும் அறியாதவர். உயிர்கள் அனைத்தும் தாந்தாம் செய்த வினைக்கேற்ப இன்பமும் துன்பமும் உயர்வும் தாழ்வும் செல்வமும் வறுமையும் எய்தும் என்பதை இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

விதியால் துன்பம் வரும்போது கலங்கக் கூடாது என்ற விதி நம்பிக்கையை வலியுறுத்தும் ஔவையாரின் இப்பாடல்

**" இட்டமுடன் என் தலையில்**

**இன்னபடி என்றெழுதி**

**விட்ட சிவனும் செத்து விட்டானோ?..."**

இறைவன் நம் தலைவிதியை எழுதியுள்ளான். அந்த விதியின்படி நடக்கும் துன்பங்களை நினைத்துக் கலங்காமல் **"அனைத்தையும் இறைவன் பார்த்துக் கொள்வான்"** என்று அவனிடம் சரணடைவதே புத்திசாலித்தனம் என்று ஔவையார் கூறுகிறார்.

**மறுபிறப்பு நம்பிக்கை:**

மனித வாழ்வு என்பது இப்பிறவியோடு முடிந்துவிடுவதில்லை. அது பிறவிக் கடலாகத் தொடரக்கூடியது என்ற ஆன்மீகத் தத்துவத்தின் வெளிப்பாடே மறுபிறப்பு நம்பிக்கையாகும்.

**" உறங்கு வதுபோலும் சாக்காடு வறங்கி**

**விழிப்பது போலும் பிறப்பு "**

உலகில் மனிதன் இறப்பது தூங்குவதற்கு ஒப்பாகும். மறுபடியும் அவன் பிறவி எடுப்பது என்பது தூங்கி விழித்தெழுத்த நிலையோடு ஒத்திருக்கும்.

**ஔவையார் தனிப்பாடல் திரட்டில் மறுபிறப்பு நம்பிக்கை:**

ஔவையார் அருளிய இந்தத் தனிப்பாடல் மனித வாழ்வியல் தொடர் பயிற்சியால் கைவரக்கூடிய திறமைகள் மற்றும் பிறவியிலேயே அமையும் நற்குணங்கள் குறித்து விளக்குகிறது. ஓவியம் தமிழ் கல்வி மற்றும் நடையில் திறமை பெறத் தொடர் பயிற்சி அவசியம். ஆனால் நல்ல நட்பு கருணை கொடை இயல்பாகவே அமையும் என இப்பாடல் கூறுகின்றது.

**" சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்**

**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்**

**நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்**

**கொடையும் பிறவிக் குணம் ”**

**அறநெறி நம்பிக்கை:**

சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் உன்னதமான கோட்பாடாகும். அரசர்களின் அதிகாரம் செல்வத்தின் பெருமை ஆகியவற்றை விடவும் **‘அறமே என்றும் வெல்லும்;’** என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைப் புலவர்கள் இப்பாடல்களில் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளனர்.

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற”**

ஒருவன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அதுவே மனத்தூய்மை இல்லாத மற்றவை எல்லாம் ஆரவாரத் தன்மை உடையவை.

ஔவையின் தத்துவப் பாடல் வாழ்வின் நான்கு குறிக்கோள்களான அறம் பொருள் இன்பம் மற்றும் வீடுபேற்றிற்கு எளிய விளக்கம் அளிக்கிறது.பிறருக்குக் கொடுப்பது அறம் தீய வழிகளை விடுத்து நேர்மையாகப் பொருள் ஈட்டுவது அன்பான தம்பதியரின் ஒருமித்த வாழ்வு இன்பம் மற்றும் இறைவனை நினைத்து இப்பற்றுகளைத் துறப்பது வீடுபேறு என அறநெறி நம்பிக்கையை இப்பாடல் கூறுகின்றது

**“ ஈதலறத் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்**

**காத லிருவர் கருத்தொருமித் - தாதரவு**

**பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்**

**விட்டதே பேரின்ப வீடு”**

**நல்வினை –தீவினை நம்பிக்கை:**

மனித வாழ்வின் இன்ப துன்பங்களை ஒழுங்குபடுத்தும் மிக முக்கிய செயல்களாகும். இப்பிறவியிலோ அல்லது முற்பிறவியிலோ நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அதற்கேற்ற பலனை நாம் அனுபவித்தே தீர வேண்டும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைப் புலவர்கள் இப்பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

**“ எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**

**வீயாது பின்சென்று அடும் ”**

எவ்வளவு பெரிய பகையை அடைந்தவரும் ஒரு வகையில் அதிலிருந்து தப்பி பிழைத்தல் கூடும். ஆனால் ஒருவர் செய்த தீவினையாகிய பகை செய்தவரை விட்டு நீங்காமல் பின் தொடர்ந்து அவரை அழிக்கும்.

**துறவற நம்பிக்கை:**

உலகியல் இன்பங்களின் தற்காலிகத் தன்மையை உணர்ந்து பேராசைகளையும் அகந்தையையும் நீக்கி ஆன்ம விடுதலையை நோக்கிப் பயணிப்பதே துறவற நம்பிக்கையாகும்.

**"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன் "**

ஒருவன் எந்தெந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.

**" பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்**
**எத்தாலுங் கூடியிருக்கலாம் - சற்றேனும்**
**ஏறுமா றாக விருப்பளே யாமாயிற்**
**கூறாமற் சந்தியாசங் கொள் "**

ஔவையார் பாடிய கணவன் - மனைவி உறவின் முக்கியத்துவத்தை விளக்கும் தனிப்பாடல் இல்லற வாழ்வில் நற்குணமுடைய மனைவி அமைந்தால் மகிழ்ச்சியுடன் வாழலாம் என்பதை எடுத்துரைக்கிறது. மனைவி ஏறுமாறாக நடந்துகொண்டால் சந்நியாசம் மேற்கொள்வதே சிறந்தது அதாவது துறவறம் மேற்கொள்ளலாம் என இப்பாடல் கூறுகின்றது.

**ஒழுக்க நம்பிக்கை:**

ஒருவர் தன் வாழ்க்கையில் பின்பற்றும் அடிப்படை கொள்கைகள் நேர்மை மற்றும் கடவுள் அல்லது பிரபஞ்சத்தின் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத பற்று. இவை தனிமனிதனின் நற்பண்புகளையும்; சமூகத்தில் அவனது நற்பெயரையும் எடுத்துக்கூறுவதாக அமைகின்றன

**" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும் "**

ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதால் அந்த ஒழுக்கமே உயிரினும் மேலானதாகப் போற்றப்படும்.

**வீரர் நம்பிக்கை:**

போரில் உயிர் நீத்த வீரர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டனர் என்பதை கூறும் பாடல்

**" இல்லா கியரோ காலை மாலை**
**அல்லா கியர்யான் வாழு நாளே**
**நடுகற் பீலி சூட்டி நாரரி**
**சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ**
**கோடுயர் பிறங்குமலை கெழீஇய**
**நாடென் கொடுப்பவுங் கொள்ளா தோனே "**

போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு நடுகல் நாட்டி வழிபடும் மரபு இருந்தது. வீரர்கள் மறைவிற்குப் பிறகும் மக்களை காப்பார்கள் என்ற நம்பிக்கை **நிலவியது.**

**" ஒன்றாகக் காண்பதே காட்சி ; புலைஐந்தும்**

**வென்றாகக் காண்பதே வீரம்; விடையின்மேல்**

**பாகனாய் நின்றானைப் பற்றுவதே பற்று: மற்றைக்**

**சாகாமை கற்பதே கல்வி"**

போர்க்களத்தில் பலரை வீழ்த்துவதை விட தன் மனதை அடக்குவதே ஒரு வீரனின் ஆகச்சிறந்த ஆற்றல் என்று ஔவையார் இப்பாடல் மூலம் தெளிவுப்படுத்துகிறார்.

**கனவு நம்பிக்கை:**

கனவுகள் எதிர்கால நிகழ்வுகளை உணர்த்தும் என்ற நம்பிக்கையின் பாடல்

**" நனவென ஒன்றில்லை ஆயின் கனவினால்**

**காதலர் நீங்கலர் மன் "**

**ஔவையார் தனிப்பாடலில் நம்பிக்கை:**

மனிதனுக்கு எது துணையாகும் என்பதை விட எது அவனுக்கு உறுதியான வெற்றியைத் தரும் என்பதை இப்பாடல் விளக்குகிறது. வாழ்க்கையில் நம்பிக்கை இழக்கும்போது தன்னம்பிக்கையை மீட்டெடுக்க உதவும் இப்பாடல்

**" போந்த வுதாரனுக்குப் பொன்றும்பு சூரனுக்குச்**

**சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு – ஆய்ந்த**

**அறிவோற்கு நாரி யருந்துரும்பா மில்லத்**

**துறவோர்க்கு வேந்தன் துரும்பு "**

ஒவ்வொருவருக்கும் எதன் மீது பற்று இருக்கிறதோ அதைப் பொருத்து அவர்களின் நிலை அமையும் என்பதை உணர்த்துகிறது. இலக்கை நோக்கிச் செல்லும் துணிவுடையவனுக்கு மரணம் கூட ஒரு பொருட்டல்ல என்ற தன்னம்பிக்கையையும் உறுதியான நம்பிக்கையையும் இப்பாடல் கூறுகின்றது.

**" சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்**

**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்**

**நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்**

**கொடையும் பிறவிக் குணம்** "

சித்திரமும் தமிழும் கல்வியும் நடையும் தொடர்ந்து பயிற்சி செய்வதால் மட்டுமே கைவரப்பெறும். எனவே தொடர் முயற்சியார் எதையும் சாதிக்கலாம்; என்ற நம்பிக்கையை இப்பாடல் மூலம் அறியலாம்.

**பிறர் திறமையை கண்டு கலங்காதே என்ற நம்பிக்கை:**

**" வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்**
**தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம்பெரிதும்**
**வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்**
**எல்லார்க்கு மொவ்வொன் றெளிது "**

தூக்கணாங்குருவி கூடு கட்டுவது போல் மனிதனால் கட்ட முடியாது.எறும்பின் புற்று தேனீயின் கூடு போல ஒவ்வொன்றுக்கும் தனித்திறமை உண்டு. அதனால் நமக்கும் ஒரு தனித்திறமை உண்டு என்ற நம்பிக்கை வேண்டும் என்ற செய்தியை அறிய முடிகின்றது.

**முடிவுரை:**

உலகியல் துன்பங்கள் வாட்டினாலும் இறைவனின் பேரருள் நம்மை என்றும் காக்கும் என்ற அசைக்க முடியாத பக்தி நெறியையும் மனித வாழ்வின் இன்ப துன்பங்களையும் வறுமையையும் விதியின் பயனாகக் கருதி இப்பிறவியில் நாம் செய்யும் நல்வினைகளும் தீவினைகளுமே அடுத்த பிறவியின் இன்ப துன்பங்களைத் தீர்மானிக்கின்றன என்றும் வறுமை நிலையிலும் நேர்மை தவறாமல் வாழ்தல் ஈகை குணம் மற்றும் பிறருக்கு உதவுதல் போன்ற உன்னத அறங்களையும் இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்ற எதார்த்தத்தை உணர்த்தி மன உறுதியோடு வாழ வழிகாட்டுகின்றன.தனிமனித ஒழுக்கமும் அறநெறியுமே ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் என்பதை குறிப்பிடப்பட்டுள்ளது.